**நில அளவைச் சபை - 2022**
---------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நில அளவைச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க அளவைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறானகூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டுமுகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள்,ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் டிவமைக்கப்பட்டிருந்தன என்பதுடன் அத்தகைய முறைமைகள்,டைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 27 பந்தி பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கையொன்றின் மாற்றத்தை பின்நோக்கி பயன்படுத்தும் போது அந்த புதிய கணக்கீட்டு | சபையின் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. 2021 இன் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமம் முன்னரிலிந்து பயன்படுத்தியதாக கருதி நிறுவனம் சமர்பிக்கும் பழைய கடந்தகாலம் மற்றும் சமர்பிக்கப்படும் ஏனைய அனைத்து கடந்தகாலத்திற்கான தேறிய சொத்துக்கள்/ மூலதனத்திலுள்ள தாக்கத்திற்குட்படும் அனைத்து கூறுகளினதும் ஆரம்ப மீதியை செம்மையாக்க வேண்டும். அதன் பிரகாரம் கடந்த ஆண்டின் நிலையான வைப்பு வட்டி கணிப்பீடு காசு அடிப்படையிலும் மீளாய்வாண்டில் அக் கணக்கீட்டு கொள்கையை மாற்றி அட்டுறு அடிப்படையை பயன்படுத்தியதால் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட வேண்டிய ரூபா 153,581 தொகை இவ்வாண்டினுள் கிடைத்த வருமானமாக கருதி கணக்கீடு செய்த காரணத்தால் மீளாய்வாண்டினுள் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 153,581 இனால் கூடுதலாக மதிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்பு வட்டி வருமானத்தை அடையாளப்படுத்தும் போது மாத்திரம் காசு அடிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது. 2022 ஆண்டு முதல் முன்நோக்கி நிலையான வைப்பு வட்டி வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 34 பந்தி பிரகாரம் நிலையான வைப்பு வட்டி காசு அடிப்படையிலிருந்து அட்டுறு அடிப்படையிக்கு மாற்றும் கொள்கை மாற்றத்திற்குரியதாக மேற்கொள்ள வேண்டிய நடைமுறை காலத்திற்காக மற்றும் சமர்பித்துள்ள ஒவ்வொறு கடந்த காலத்திற்கும் நடைமுறையாகும் வரை தாக்கம் ஏற்பட்ட ஒவ்வொறு நிதிக்கூற்றினதும் வரிசை உருப்படிக்குமான தாக்கம் மற்றும் நடைமுறையாகும் வரை நடைமுறை காலம் மற்றும் சமர்பித்துள்ள ஒவ்வொறு கடந்த காலத்திற்குமான செம்மையாக்கல் பெறுமதி ஆகிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கு உள்ளடங்க வேண்டிய வட்டி வருமானத்தை 2022 ஆண்டின் பெறுவனவாக கருதி வட்டி வருமானம் கணக்கிடப்பட்ட காரணத்தால் 2022 ஆண்டின் வட்டி வருமானம் கூடுதலாக இனங்காணல் இடம்பெற்றுள்ளது. 2022 ஆண்டிறுதியில் மூலதனத்திற்கு இதனால் தாக்கம் ஏற்படவில்லை என சுட்டிக் காட்டுகிறேன். எனினும் சபைக்கு சொந்தமான ஓராண்டிற்கு அதிக காலம் காணப்படும் நிலையான சொத்துக்கள் இல்லாததால் வைப்பு வட்டியை இனங்காணும் அடிப்படை மாற்றமடைவதன் மீது கடந்த காலத்திற்கு அல்லது எதிர்காலங்களிற்கு தாக்கம் ஏற்படாததால் இவ் விடயங்களை வெளிப்படுத்த | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையில்லை என சுட்டிக் காட்டுகிறேன். | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 36 பந்தி பிரகாரம் எதிர்பாரா பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும், நில அளவைச் சபையினால் நில அளவையாளர் ஒருவரின் அனுமதிப் பத்திரத்தை இறத்துச் செய்வதற்கு எதிராக அந் நில அளவையாளரினால் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இலக்கம் CA/MISC/04/16 கொண்ட வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நில அளவை சபையிடம் நட்டஈடு அல்லது வேறு நிதி கோரலொன்றை மேற்கொண்டு இவ் வழக்கை தாக்கல் செய்யப்படவில்லை. நில அளவை சட்டத்தின் 49 பிரிவு பிரகாரம் வழக்கு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. நில அளவை சபைக்கு எதிராக இவ்வாறான சில வழக்குகள் தற்போது விசாரிக்கப்படுவதுடன் அதன் மூலம் பொருளாதார நலன்களோ அல்லது சேவை இயலுமைகொண்ட வளங்கள் வெளிச் பாய்ச்சல் இடம்பெறாததால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த தேவையில்லை என சுட்டிக் காட்டுகிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களின் இறுதி இருப்புக்களின் பெறுமதி ரூபா 383,348 ஆக காட்டிய போதும், இறுதி இருப்பு கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 294,263 ஆனதில் ரூபா 89,085 இனால் இருப்பு மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி 07 திகதி மற்றும் நவம்பர் 22 திகதிகளில் கொள்வனவு செய்த நான்கு டோனர்களின் மொத்த பெறுமதியான ரூபா 89,085 தொகை நுகர்வுப் பண்ட பதிவேட்டில் மற்றும் இறுதி இருப்பு கணிப்பீட்டு அறிக்கையிலும் இப் பெறுமதி உள்ளடக்கப்படாததுடன் 2022.12.31 திகதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் இறுதி இருப்பை காட்டும் போது அப் பெறுமதியை உள்ளடக்கி இருப்பின் பெறுமதி ரூபா 383,348 ஆக காண்பித்துள்ளதாக சுட்டிக் காட்டுகிறேன். | இறுதி இருப்பின் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி நிலமை கூற்றுக்களில் பெற வேண்டிய வருமான மீதி ரூபா 627,169 ஆன போதும், அதற்குரிய இலக்கம் 05 கொண்ட விரிவான குறிப்பில் ரூபா 708,846 ஆக காண்பித்ததில் ரூபா 81,677 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியை கணக்கிடும் போது ஏற்பட்ட தவறினால் ரூபா 81,677 தொகை கூடுதலாக நிதிக்கூற்றக்களில் காண்பித்து பின்னர் அதனை இனங்கண்டு சரிசெய்யப்பட்டது. எனினும் இறுதி நிதிக்கூற்றுக்களின் குறிப்பிலக்கம் 05 உரிய அப் பெறுமதியை சரிசெய்ய தவறியுள்ளது. பெறவேண்டிய வருமான மொத்த மீதியும் ரூபா 627,169 என சரியாக வேண்டும். | நிதி நிலமை கூற்று மற்றும் அதனுடன் தொடர்பான விரிவான குறிப்பின் மீதிகள் சமப்பட வேண்டும். |
| (இ) | வருமான பேரேட்டுக் கணக்கில், முற்பெறுவனவு அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 7,469,912 ஆன போதும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பிலக்கம் 08 இன் கீழ் அவ்வருமானம் ரூபா 7,395,112 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 74,800 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பேரேட்டில் பெறவேண்டிய ரூபா 74,800 தொகை குறைந்த பின்னர் தனிநபர் கணக்குகளில் மீதி ரூபா 8,453,362 ஆக காணப்படுவதுடன் அத் தொகையும் உள்ளடங்கும் வகையில் முற்பெறுவனவு வருமானக் கணக்கு தயாரித்துள்ள முறையை நிதிக்கூற்றுக்களின் இலக்கம் 08 மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. அங்கு நில அளவையாளர்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 74,800 தொகையையும் சேர்த்து முற்பெறுவனவு மொத்த வருமான மீதி ரூபா 8,528,162 தொகையை காண்பித்துள்ளதாக சுட்டிக் காட்டுகிறேன். | அனுமதிப்பத்திர வருமானப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் மற்றும் இலக்கம் 08 குறிப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 பெப்ரவரி மாதம் ஓய்வுபெற்ற பெண் அலுவலர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 121,240 தொகையை 2022 மார்ச் 24 திகதி செலுத்தி குறித்த பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் அதற்காக ரூபா 114,542 தொகை மாத்திரம் கழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வித்தியாசம் ரூபா 6,698 ஆனது. மேலும் பாசுப் பாய்ச்சல் கூற்றிலும் பணிக்கொடை கொடுப்பனவாக ரூபா 114,542 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு ஆரம்பத்தில் சம்பள ஏற்றம் வழங்குவதன் மீது அடிப்படை சம்பளம் மாற்றமடைந்துள்ளதுடன் அதற்குரிய பணிக்கொடையை கணிக்கும் போது செலுத்த வேண்டிய பணிக்கொடை ரூபா 121,240 ஆனது. 2022 மார்ச் மாதம் அத் தொகையை செலுத்தும் போது அதன் போது | பணிக்கொடை செலுத்த முன்னர் குறித்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கியிருந்த ரூபா 114,542 தொகையை ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்து கழித்து செலுத்த வேண்டிய மொத்த தொகை மற்றும் ஒதுக்கியிருந்த தொகையில் வித்தியாசமான ரூபா 6,698 தொகையை ஏனைய செலவுகளின் கீழ் 2022 ஆண்டின் இலாபத்திற்கு எதிராக செம்மையாக்கப்பட்டது. | |
| (உ) | அளவை சட்டத்தின் 47 (3) பிரிவு பிரகாரம் நில அளவையாளர் ஒருவர் தொழில் முறைகேடுகளிற்கு குற்றவாளியாகியுள்ள போது, அவரினால் சபைக்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் மற்றும் செலவுகளையும் சபைக்கு அறவிட வேண்டிய கடனொன்றாக அறவிட வேண்டிய போதும், பதிவை இரத்துச் செய்த இலக்கம் 19891607 கொண்ட நில அளவையாளரின் பெயரை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு பதிலாக சபையினால் செலவிட்ட ரூபா 5,908 தொகையை குறித்த நில அளவையாளரிடமிருந்து அறவிட்டிருக்காததுடன் அதனை கடன்படுனர் மீதியொன்றாக மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | குறித்த பிரதிவாத நில அளவையாளர் மேற்கொண்ட தொழில் முறைகேடுகளிற்காக சபையினால் மேற்கொண்ட முறையான பரிசோதனையின் பிரகாரம் அவரின் பதிவு 2023.01.01 முதல் 2025.12.31 வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (வருடாந்த அனுமதிப் பத்திரமும் இரத்தாகும்) பதிவை இரத்துச் செய்தது தொடர்பாக அவரின் பெயரை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக சபையினால் மேற்கொண்ட செலவையும் அவரிடமிருந்து அறவிடல், அவரிற்கு வழங்கும் தண்டனை இரண்டாவதால் அதனை அறவிடாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அளவை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கடந்த ஆண்டு அனுமதிப் பத்திரம் கோரிய விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் விநியோகிக்காததால் கடந்த ஆண்டு திசெம்பர் 31 திகதியுடன் முன்கொண்டு வரப்பட்ட அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 5,111,652 ஆனதுடன் மீளாய்வாண்டில் முன்கொணடு செல்லப்படும் பெறுமதி ரூபா 7,469,912 ஆனது. இம் மீதிகளிற்கு இடையில் ரூபா 1,879,710 தொகையானது இரண்டு | அளவை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளவது தவிர வேறு காரணத்திற்காக செலுத்திய ரூபா 788,740 தொகை எஞ்சியுள்ளது. இத் தொகையை அவர்களிற்கு மீள் செலுத்த 2023.04.21 திகதி நடந்த 317 கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்து அத் தொகையை மீள் செலுத்தும் நடவடிக்கை | பெறுவனவுகளை இனங்கண்டு தீர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளிலும் மாற்றமின்றி நிலவியதுடன் அவற்றில் ரூபா 1,356,600 தொகை மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள 357 விண்ணப்பதாரர்களினால் கடந்த ஆண்டு செலுத்திய கட்டணமாவதுடன் அவர்களுக்கு மீளாய்வாண்டிலும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே எஞ்சிய மீதியான 523,110 தொகையானது எதற்காக கிடைத்த பெறுவனவு என குறிப்பாக இனங்காண்டிருக்கவில்லை. | இடம் பெறுவதுடன் நில அளவையாளர்களினால் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு எதிராக விசாரிக்கப்படும் வழக்கு 2023.05.29 திகதி இடம்பெறுவதுடன் அங்கு கிடைக்கும் தீர்ப்பை கவனத்திற் கொண்டு 2023 ஆண்டினுள் இந்த தனிநபர் கணக்கு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | |
| (எ) | கடந்த ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட ரூபா 186,150 ஆன இனங்காணப்படாத பெறுவனவு மீதியை குறிப்பாக இனங்கண்டிருக்காத போதும் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி நிதி செயலாற்றுகை கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சேவையொன்றிற்கு விண்ணப்பம் அல்லது பற்றுச் சீட்டு சமர்பிக்கப்படாத பெறுவனவுகளை இனங்காண எவ்வித இயலுமையும் இல்லாததால் நில அளவை சபையினால் ஆண்டிறுதியில் மேற்கொள்ளப்படும் தீர்மானமொன்றின் பிரகாரம் குறித்த இனங்காணாத பெறுவனவுகளை ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுகிறது. 2022 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் இவ்வாறு இனங்காணாத பெறுவனவாக ரூபா 186,150 தொகையும் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. | பெறுவனவுகளை சரியாக இனங்காணும் முறைமையொன்றை வங்கியுடன் கலந்துரையாடி நடைமுறைப்படுத்த வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் ரூபா. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 23 (1) (அ) பிரிவு | தகவல் அலுவலர் ஒருரை நியமித்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானத்தை ஏற்றுக் கொள்கிறேன். | சபைக்கு தகவல் அலுவலர் ஒருரை நியமிக்க வேண்டும் |

(ஆ) 2002 இன் 17 ஆம் இலக்க அளவை சட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 32 (1) பிரவு | 2002 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சபைக்கு நிரந்தர செயலாளர் ஒருவரை நியமித்திருக்கவில்லை. | செயலாளர் ஒருவரை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் தற்போது இடம் பெறுகின்றது. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 37 (எ) பிரவு | நில அளவீட்டில் ஈடுபடும் நபர்களின் கல்வி, பயிற்சி மற்றும் வரவேற்பு ஆகியவற்றில் சீரான தன்மை மற்றும் பரஸ்பரத்தைப் பாதுகாப்பதற்காக வெளிநாட்டு அதிகாரிகளுடன் பரஸ்பர வேலைத் திட்டமொன்றிற்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதனை செயற்படுத்துவது சபையின் பணியான போதும் அதனை மேற்கொண்டிருக்கவிலலை. | இது வரை வெளிநாட்டு நிறுவனங்களுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. | வெளிநாடுகளுடன் பரஸ்பர வேலைத் திட்டமொன்றிற்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (iii) | 38 (இ) பிரவு | சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களை நியமிக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையும் அதன் நிரந்தர ஆளணி ஒரு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளருடன் மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததுடன், தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் மூன்று அலுவலர்கள் பணியாற்றுவதாக அவதானிக்கப்பட்டது. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் தொடர்பை பேணிக்கொள்ளும் நடவடிக்கைளிற்காக இரண்டு அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டுமென 2019 சனவரி 03 திகதிய 239 ஆவது சபை கூட்டத்தில் தீர்மானித்திருந்த | ஆளணி ஆட்சேர்ப்பு திட்டதிதை திருத்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது ஆட்சேர்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு தற்காலிக அலுவலர்கள் தேவைப்படுகின்றனர். | ஆட்சேர்ப்பு திட்டதிதைத்தை அங்கீகரித்துக் கொண்டு ஆட்சேர்க்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதும் 2020 செப்டம்பர் 03 திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் முகாமைத்துவ உதவியாளர் 02 பதவிகளை அங்கீகரித்திருந்தது. அவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரையும் அப் பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு திட்டதிதை அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | | |
| (iv) | 38 (எ) பிரவு | சபையின் விவகாரங்களை நிர்வகிப்பது தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | சட்ட பிரகாரம் விதிகளை தயாரித்து சட்ட வரைவை திணைக்களத்திற்கு அனுப்பிய பின்னர் அவதானிப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளது. அத் திணைக்களத்துடன் ஆரம்ப கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. | அளவை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | 46 பிரவு | சபைக்கு முன்வைக்கப்படும் நில அளவையாளரின் தொழில் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய பொதும் 2020 ஆம் ஆண்டில் கிடைத்த 113 முறைப்பாடுகளில் 80 முறைப்பாடுகளும், கடந்த ஆண்டில் கிடைத்த 143 முறைப்பாடுகளில் 104 முறைப்பாடுகளும் மீளாய்வாண்டில் கடைத்த 176 முறைப்பாடுகளில் 134 உம் தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. | கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக சட்ட பிரகாரம் உத்தியோக நாட்கள் வழங்கி எதிர்வாத தரப்பினருக்கு வாக்குமூலத்தை சமர்பிக்க போதிய காலம் வழங்கப்படல், ( 28 நாட்கள்), துணை குழுவினால் முறைப்பாடு மற்றும் அது தொடர்பான ஆவண சான்றுகளை ஒழுங்காக புலனாய்வு செய்து தரப்பினரை அழைப்பித்தல், மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை முறைப்பாடுகளை விசாரிப்பதுடன் முறைப்பாட்டினர் அல்லது எதிர்வாத தரப்பினர் நியாயமான காரணங்களை | நில அளவையாளர் களின் தொழில் முறைகேடு தொடர்பான விசாரணையை துரிதப்படுத்துவ தறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிட்டு வருகை தராத சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுவதுடன் சபை தீர்மானித்து மேலும் சந்தர்ப்பம் வழங்குதலை மேற்கொள்ளல் போன்ற விடயங்களினால் முறைப்பாட்டை தீர்ப்பதனை நிச்சகிக்க முடியாது. மேற்குறிப்பிட்ட முக்கிய விடயங்களின் பிரகாரம் கிடைக்கும் முறைப்பாடுகள் சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமென அறிக்கையிடுவதுடன் சபையின் நிதி நிலமையின் பிரகாரம் முறைப்பாடுகளை விசாரிக்கும் தடவைகளை அதிகரிக்க சபை கருதிற் கொண்டுள்ளது. |

**1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 9(I) பிரிவின் மூன்றாவது அட்டவணையில குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரமே வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள போது, சபை அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றாக இல்லாத போதிலும் வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022.11.02 திகதி நிதி அமைச்சிற்கு அனுப்பியிருந்த கடிதத்திற்குரியதாக நினைவூட்டல் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | வரிச் சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 367,510 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 958,915 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 591,405 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் பதிவுக் கட்டண வருமானம் ரூபா 1,597,910 இனால் குறைந்தமை மற்றும் மொத்த செலவினம் ரூபா 1,572,036 இனால் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

நில அளவையாளர்களினால் அனுமதிப் பத்திரங்களை மீண்டும் புதுப்பித்தல் குறைவடைந்த காரணத்தால் மற்றும் புதிதாக நில அளவையாளர்கள் பதிவு செய்யாத காரணத்தால் அனுமதிப் பத்திர கட்டணம் மற்றும் பதிவு கட்டண வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆண்டினுள் புதிய நிலையான வைப்புக்களை ஆரம்பித்தல் மற்றும் 2022 ஆண்டு முதல் அட்டுறு அடிப்படையில் நிலையான வைப்பு வட்டி கணக்கிடப்பட்டுள்ளதால் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்துள்ளதுடன் 2022 ஆண்டில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதால், செயலமர்வு வருமானம் அதிகரித்திருந்தது. ஏனைய செலவினத்தில் உள்ள வர்த்தமானி அறிவித்தல் செலவு அதிகரித்த காரணத்தால் ஏனைய செலவுகள் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சபையின் நடைமுறை விகிதம் முறையே 2.6:1 மற்றும் 2.19:1 ஆக காணப்பட்டதுடன் விரைவுச் சொத்து விகிதம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில முறையே 2.55:1 மற்றும 2.15:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் முக்கிய பணியொன்றான நில அளவை சபைக்கு சமர்பிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஒவ்வொரு மாத்திற்கும் ஒரு தடவை சபை கூடுவதுடன், ஒரு கூட்டத் தடவையின் போது விசாரணைக்காக எடுக்கப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4 முதல் 10 வரையான வீச்சளவில் காணப்பட்டது. மீளாய்வாண்டில் சபையின் சம்பளம் மற்றும் படிகளின் கூட்டுத் | கொரோனா தொற்றுடன் அவ் ஆண்டுகளில் முறைபாடுகளை தீர்க்கும் பணியில் குறைவொன்றும் அதன் பின்னர் செலவினத்தில் அதிகரிப்பொன்றும் காரணமானது. சாதாரணமாக எடுக்கும் போது இப் பொது மக்கள் முறைப்பாடு ஒன்றுக் கொன்று வித்தியாசம், மிகவும் முக்கியமானதாவதுடன் (Extreme unique) அவற்றை விசாரிக்கும் போது நீதிமன்றத்தில் போன்றல்லாது பொது மக்கள்/தரப்பினரிற்கு சந்தர்ப்பம் வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. முறைப்பாட்டு விசாரணை கொழும்பில் | முறைப்பாடுகளை விசாரிப்பதனை துரிதப்படுத்தும் முறைமையை தயாரித்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகை மொத்த செலவின் 63 சதவீதமானது. எனினும் கிடைத்த 176 முறைப்பாடுகளில் விசாரிக்கப்பட்டுள்ளதே 42 அதாவது, 24 சதவீதம் மாத்திரமே. | அமைந்துள்ள நில அளவை சபையில் மாத்திரம் இடம் பெறுவதால் தரப்பினர் அறிவித்து/ அறிவிக்காது விசாரணைக்காக வருகை தராமை காணப்படுகின்றது. அநுராதபுரம், பொலன்னறுவ, யாழ்பாணம் போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளும் அவ்வாறு விசாரிக்கப்படுகிறது. இம் முறைப்பாடுகளை விசாரிக்கும் செயலாற்றுகைக்காக கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள எண்ணிக்கை ரீதியாக மற்றும் கணித ரீதியான சுட்டியொன்றால் பிரதிபலிக்க முடியுமான போதும் அதனை விஞ்ஞான ரீரியாக நடைமுறையாக மேலும் பல காரணங்களை கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் இம் முறைப்பாடுகளை விசாரிப்பதனை துரிதப்படுத்துவது தொடர்பாக சபையின் கலந்துரையாடலிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED/01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின், பொது முயற்சிகளின் நல்லாளுகைக்காக விநியோகிக்கப்பட்ட கைநூலில் 6.6 பந்தி பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் வருடாந்த வரைவு அறிக்கை மற்றும் கணக்குகள், கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் வரிசை அமைச்சிற்கு மற்றும் பொது திறைசேரியின் பொது முயற்ச்சிகள் | 2022.12.31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் கணக்கறிக்கையை 2022.02.28 திகதி உரியவாறு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்து அதனுள் உள்ளடங்கியிருந்த தவரை சரி செய்து மீண்டும் அறிக்கை 2023.04.25 திகதி சமர்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| திணைக்களத்திற்கும் சமர்பிக்க வேண்டிய போதும் சபை மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் கணக்குகளை 2023 ஏப்ரல் 25 திகதியே கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்திருந்தது. | | |

**4.2 வருடாந்த அறிக்கை**

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED/01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின், பொது முயற்சிகளின் நல்லாளுகைக்காக விநியோகிக்கப்பட்ட கைநூலில் 6.6 பந்தி பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கை மும்மொழிகளிலும் நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2015, 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்கு உரிய அறிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருடாந்த அறிக்கையை உரிய காலத்தில் குறித்த அமைச்சிற்கு சமர்பித்துள்ள போதும் அவற்றின் அச்சுப் பிரதிகள் பாராளுமன்றத்திற்கு சமர்பித்ததன் பின்னர் அங்கு சுட்டிக்காட்டியிருந்த திருத்தத்தை மேற்கொண்டு மீண்டும் சமர்பிக்க தாமதித்துள்ளது. எவ்வாறாயினும் இச் பிரச்சினையை காணி அமைச்சுடன் கிட்டிய தொடர்புகளை மேற்கொண்டு 2023.05.19 திகதியளவில் 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்குரிய அனைத்து அறிக்கைகளும் அமைச்சிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. அவை அங்கீகரிக்கப்பட்டு செயலாளர் கைச்சாத்திட்ட பின்னர் 2023.05.24 திகதியளவில் மீண்டும் நில அளவை சபைக்கு கிடைத்துள்ளதுடன் அவற்றின் உரிய எண்ணிக்கையான பிரதிகளை அச்சிட்டு தாமதமின்றி அமைச்சிற்கு மீண்டும் ஒப்படைக்கவுள்ளன. | 2015 ஆண்டு முதல் வருடாந்த அறிக்கையை விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டும். |

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED/01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின், பொது | 2022 ஆண்டில் நில அளவை சபையின் மூலஉபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 2023 ஆண்டிற்காக மூலஉபாய | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முயற்சிகளின் நல்லாளுகைக்காக விநியோகிக்கப்பட்ட கைநூலில் 2.3 பந்தி பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மூலஉபாய திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | |

**4.4 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED/01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின், பொது முயற்சிகளின் நல்லாளுகைக்காக விநியோகிக்கப்பட்ட கைநூலில் 2.3 பந்தி பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் நில அளவை சபையின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 2023 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.5 கணக்காய்வுக் குழு**

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED/01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின், பொது முயற்சிகளின் நல்லாளுகைக்காக விநியோகிக்கப்பட்ட கைநூலில் 4.2 (h) பந்தி பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் காலாண்டிற்கு ஒன்று வீதம் 04 நாடாத்தப்பட வேண்டிய போதும் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | 2022 ஆண்டில் நில அளவை சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 03 நடாத்தப்பட்டுள்ளதுடன் நாட்டில் நிலவிய நிலையற்ற தன்மையும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அதற்கு தொடர்பான தடங்கல்கள் காரணமாக (03) மூன்று கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |